கலைஞர் 100

# மயிலாடுதுறை நகராட்சி

குறள் : கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி

பொருள்: ஒருவருக்கு வாழ்வும், தாழ்வும் உலக இயற்கை. அந்த இரு நிலைமையிலும் நடுநிலையாக இருந்து உறுதி காட்டுவதே பெரியோர்க்கு அழகாகும்.

கூட்ட எண்: 27 /2023

நகராட்சி அலுவலகம்
மயிலாடுதுறை

நாள்: 16.02.2024

## சாதாரணக்கூட்டம்

அன்புடையீர்!

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – சாதாரணக்கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 2024–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20.02.2024–ந்தேதி செவ்வாய் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக்கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,

**1).** நகராட்சி ஆணையர், பொறியாளர், நகர்நல அலுவலர் ஆகியோர்களின் டிசம்பர் மற்றும் ஜனவரி மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 661 நாள்: 20.02.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது.**

2). இந்நகராட்சியின் 2023–2024–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு 2024–2025–ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடும் வரவு–செலவு அறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 303/2024/பி1**

**மன்றத் தீர்மானம் எண். 662 நாள்: 20.02.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

3). மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரம் டெங்கு கொசு புழு மற்றும் முதிர் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்வற்காக போதிய மருந்துகள் இருப்பு இல்லாததாலும், தற்போது பருவ மழை காலம் என்பதாலும், கொசுக்களை கட்டுபடுத்தும் விதமாக கொசு ஒழிப்பு மருந்து கொள்முதல் செய்வதற்கு ரூ.5.00 (ஐந்து லட்சம்)–த்திற்கு மன்ற அனுமதி பெறப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் தொடர்மழை காரணமாக இருப்பில் கணிசமான அளவே மருந்து உள்ளதால் கூடுதலாக கொள்முதல் செய்வதற்காகும் செலவின தொகை (பொருள்கள் மற்றும் சேவை வரி உட்பட) ரூ.69,762/– னை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.3772/2023/எச்1.**
**மன்றத் தீர்மானம் எண். 663 நாள்: 20.02.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**4)** இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து தினசரி 15.95 மெட்ரிக் டன் அளவிற்கு மக்கும் குப்பைகள் உருவாகிறது. மக்கும் குப்பைகளை நகர் பகுதிகளில் கீழ்க்கண்ட 3 இடங்களில் அமைந்துள்ள நுண் உரமாக்கும் மையம் (Micro Compost Centre) மூலம் உரமாக்குவதற்கான செயல்முறைகள் நடைமுறைபடுத்தப்பட்டு 45 முதல் 50 தினங்களில் உரமாக மாற்றப்படுகிறது.

மேற்கண்ட நுண்உரமாக்கும் மையங்களில் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கு E.M.S. Solution நுண்ணுயிர் திரவம் தயாரிப்பு செய்து இருப்பு வைத்திட, 130 லிட்டர் மூடியுடன் கூடிய பேரல்கள் 15 எண்ணிக்கை தேவைப்படுகிறது. எனவே இதனை தனியார் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு 14.11.2023 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண். | விலைப்புள்ளி அளித்துள்ளவர்களின் பெயர் | விலைப்புள்ளி விபரம் | விலை விபரம் |
|---|---|---|---|
| 1. | பரிஷித் ட்ரேடர்ஸ், திருச்சிராப்பள்ளி. | 100லிட்டர் கொள்ளளவு கொண்ட 1 எண்ணிக்கை | ரூ.2336/– |
| 2. | ட்ராஷ் வீல் ரெமிடியேஷன், சேலம். | 100லிட்டர் கொள்ளளவு கொண்ட 1 எண்ணிக்கை | ரூ.2454/– |
| 3. | கமலா ட்ரேடர்ஸ், திருச்சிராப்பள்ளி. | 100லிட்டர் கொள்ளளவு கொண்ட 1 எண்ணிக்கை | ரூ.2507/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற பரிஷித் ட்ரேடர்ஸ், திருச்சிராப்பள்ளி நிறுவனத்திற்கு கொள்முதல் செய்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 5579/2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 664 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

5) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை, தனியாக சேகரித்து, சிமெண்ட் ஆலை மற்றும் பிளாஸ்டிக் மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களுக்கு அனுப்பும் பொருட்டு, மேற்படி பிளாஸ்டிக் கழிவுகளை பேலிங் மிஷின் மூலம் கட்டுக்கட்டாக கட்டி உரக்கிடங்கில் சேமித்து வைக்கவும், பேலிங் மிஷின் மூலம் பிளாஸ்டிக் கழிவுகளை, பிரஸ் பண்ணி கட்டுவதற்கு தேவையான பேக்கிங்ரோப் மற்றும் பேக்கிங் கிளிப் ஆகியவற்றை தனியார் மூலம் கொள்முதல் செய்வதற்கு 14.11.2023 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு,

| வ. எண் | விலைப்புள்ளி அளித்துள்ளவர்களின் பெயர் | பொருள்களின் விபரம் | அளவு | விலை விபரம் ரூ |
|---|---|---|---|---|
| 1 | பரிஷித் ட்ரேடர்ஸ், திருச்சிராப்பள்ளி. | 1. while colour packing Tap | 1kg | Rs.90+18%GST |
| | | 2. Packing Tap pin | 1kg | Rs.70+18%GST |
| 2 | ட்ராஷ் வீல் ரெமிடியேஷன், சேலம். | 1. while color packing Tap | 1kg | Rs.130+18%GST |
| | | 2. Packing Tap pin | 1kg | Rs.110+18%GST |
| 3 | கமலா ட்ரேடர்ஸ், திருச்சிராப்பள்ளி | 1. while color packing Tap | 1kg | Rs.110+18%GST |
| | | 2. Packing Tap pin | 1kg | Rs.90+18%GST |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற பரிஷித் ட்ரேடர்ஸ், திருச்சிராப்பள்ளி நிறுவனத்திற்கு கொள்முதல் செய்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்றதை தொடர்ந்து 14.11.2023 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள பரிஷித் ட்ரேடர்ஸ், திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5544/2023/எச்1.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 665 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**6)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின், கடித ந.க.எண். **24196/2002**–SWZ. நாள்.**23.12.2022**–ல் அறிவுறுத்தலின்படி, இந்நகராட்சி பகுதியில் **36** வார்டுகளில் அமைந்துள்ள **12** சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் **18** பொது கழிப்பிடங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கவும், தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ODF (Certification and Q3 assessment) தரச்சான்று பெற ஏதுவாக தயார் நிலையில் வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி கழிப்பிடங்களை சுத்தமாவும், சுகாதாரமாகவும், பராமரிக்கவும், **11** நகராட்சிப் பள்ளிகள் மற்றும் **4** அரசு பள்ளிகளில் அமைந்துள்ள கழிப்பிடங்களை, சுகாதாரமாக பராமரிக்கவும், பேருந்து நிலையம் சிறுநீர் கழிக்கும் இடங்களில் சுகாதாரமுறையில் பராமரிக்கவும், நகராட்சி கட்டிடங்களில் அமைந்துள்ள ஆண், பெண், கழிப்பறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பறைகளை சுகாதாரமாகவும் சுத்தமாகவும் பராமரிக்கவும், கறை நீக்கும் திரவம் (Special Toilet stain Remover liquid) 500 லிட்டர் மற்றும் கருப்பு ஃபினாயில் – **1200** லிட்டர் தேவைபடுகிறது. மேற்கண்ட கிருமிநாசினிகளை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும், வாங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினத்தொகை (GST வரி **18%** உட்பட) ரூ.**3.25** லட்சத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.006001/2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 666 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**7)** மயிலாடுதுறை நகராட்சி பொதுசுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் தூய்மை இந்தியா திட்டம் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரத்தை பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் செயல்படுத்துவதற்கும், இதற்கு தேவையான விழிப்புணர்வு பொருட்களை அச்சிட்டு தயார் செய்து கொள்வதற்கும், தேவையான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துவதற்கும், சுவர் விளம்பரம் வரைவதற்கு மட்டுமின்றி திடக்கழிவு மேலாண்மை, தொற்று நோய்கள் மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்துவதற்கும், விழிப்புணர்வு பொருட்கள் (IEC Materials) தயார் செய்வதற்கும், மயிலாடுதுறை மாவட்ட அச்சக சேவை கூட்டுறவு நிறுவனம், மயிலாடுதுறையிலிருந்து கொள்முதல் செய்ய, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. ஏற்கனவே மன்றப்பொருள் வைக்கப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மான எண்.589, நாள்.07.11.2023–ல் அனுமதி வழங்கிதை தொடர்ந்து மாவட்ட அச்சக சேவை கூட்டுறவு நிறுவனம், மயிலாடுதுறையிலிருந்து கொள்முதல் செய்வதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 5545/2024/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 667 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**8).** மயிலாடுதுறை நகராட்சியில், துய்மை இந்தியா திட்டத்தின் மூலம் 36 வார்டுகளிலும் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதியாக மாலைமுரசு தினசரி நாளிதழில் விளம்பரம் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.11804/– க்கு தொடர்புடைய தினசரி நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 0050/2024/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 668 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**9).** மயிலாடுதுறை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் டிசம்பர் மாதத்திற்கு பிறப்பு – 238 மற்றும் இறப்பு – 45 பதிவுகள் ஆக மொத்தம் பதிவுகள்–283 இந்நகராட்சியில் பதிவேட்டில் பதியப்பட்டது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**மன்றத் தீர்மானம் எண். 669 நாள்: 20.02.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

10). மயிலாடுதுறை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் ஜனவரி மாதத்திற்கு பிறப்பு – 234 மற்றும் இறப்பு – 41 பதிவுகள் ஆக மொத்தம் பதிவுகள் – 275 இந்நகராட்சியில் பதிவேட்டில் பதியப்பட்டது என்பது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**மன்றத் தீர்மானம் எண். 670 நாள்: 20.02.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

11). மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட, தரங்கம்பாடி சாலையில் வார்டு எண்.8, பிளாக் எண்.12, நகரளவு எண்.541 இல் 4793 சதுர மீட்டர் பரப்பளவு இடம் தற்போது மயிலாடுதுறை நகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட நகர முழுமைத்திட்டத்தின்படி (Master Plan) குடியிருப்பு பகுதியாக உள்ள நிலத்தை நிறுவனங்கள் (Institution) பயன்பாடாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்து உரிய அரசாணை பெற்றுத்தருமாறு திருமதி. வீ.அன்பரசி க/பெ Dr.S.வீரபாண்டியன், எண்.2/68, நல்லாடை ரோடு, பரசலூர், தரங்கம்பாடி தாலுக்கா, என்பவரின் 05.12.2023 ஆம் தேதிய விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட நிலப்பயன்பாடு மாற்றம் தொடர்பாக பொதுமக்கள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை 30 தினங்களுக்குள் தெரிவிக்குமாறு நகராட்சியால் விளம்பரம் செய்யப்பட்டு , தமிழ் நாளிதழ் தினமணி மற்றும் ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய செய்தித்தாள்களில் கடந்த 28.12.2023 அன்று விளம்பரம் பிரசுரமாகியது. மேற்கண்டப்பொருள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனைகள் எதுவும் வரப்படவில்லை எனவே, வார்டு எண்.8, பிளாக் எண்.12, நகரளவு எண்.541 இல் 4793 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தினை மயிலாடுதுறை நகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட நகர முழுமைத்திட்டத்தின்படி (Master Plan) குடியிருப்பு பகுதியாக உள்ள நிலத்தை நிறுவனங்கள் (Institution) பயன்பாடாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்திட நகர் ஊரமைப்பு துறைக்கு பரிந்துரை செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**:6085/2023/எப்1.

**மன்றத் தீர்மானம் எண். 671, நாள்: 20.02.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**12)** இந்நகராட்சிக்கு சொந்தமான ஒராண்டு குத்தகை இனங்களை கீழ்க்கண்ட விபரப்படி 2024–25 முதல் 2026–27 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், ஏல இனங்களின் அறிவிப்புகள் அச்சடித்து கொள்வதற்கும் மற்றும் செய்தித்தாள் விளம்பரம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | உரிம இனங்களின் விபரம் | செலுத்தவேண்டிய ஏல பொறுப்பு தொகை | சொத்து மதிப்பிற்கான கூடுதல் பொறுப்பு தொகை |
|---|---|---|---|
| 1. | பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.5,00,000/- | ரூ.5,00,000/- |
| 2. | மேட்டுத் தெருவில் கிட்டப்பா அங்காடியின் பின்புறமுள்ள சைக்கிள் பாதுகாக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.1,00,000/- | ரூ.1,00,000/- |
| 3. | பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.5,00,000/- | ரூ.5,00,000/- |

| | | | |
|---|---|---|---|
| 4. | திரு.வி.க மார்க்கெட்டில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.1,00,000/- | ரூ.1,00,000/- |
| 5. | அவையாம்பாள்புரம் விஜயா தியேட்டர் எதிரில் அமைந்துள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 6. | கிட்டப்பா அங்காடி அருகில் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.1,00,000/- | ரூ.1,00,000/- |
| 7. | தற்காலிக பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.3,00,000/- | ரூ.3,00,000/- |
| 8. | பேருந்து நிலையத்தின் பிரதான கட்டிடத்தில் எடை பார்க்கும் கருவி வைத்து நடத்தும் உரிமம் | ரூ.5000/- | ரூ.5000/- |
| 9. | பேருந்து நிலையத்தின் மேற்புறம் உள்ள வாடகைக் கார்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | ரூ.10000/- | ரூ.10000/- |
| 10. | பேருந்து நிலையம் அருகில் ஆட்டோ மற்றும் சைக்கிள் ரிக்ஷாக்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.10000/- | ரூ.5000/- |
| 11. | விஜயா தியேட்டர் அருகில் வேன் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.50000/- | ரூ.50000/- |
| 12. | நகராட்சி ஆடுவதையகத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.50000/- | ரூ.50000/- |
| 13. | நகராட்சி மீன்மார்கெட்டுகளில் உள்ள கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | ரூ.1,00,000/- | ரூ.1,00,000/- |
| 14. | நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் உள்ள மீன்மார்கெட்டிற்கு கொண்டு வரப்படும் சரக்குகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.10,000/- | ரூ.10,000/- |
| 15. | தரங்கம்பாடி பொட்டவெளி தெருவில் உள்ள மீன்மார்கெட்டிற்கு கொண்டு வரப்படும் சரக்குகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.5000/- | ரூ.5000/- |
| 16. | பேருந்துநிலையத்தில் தொலைகாட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | ரூ.10,000/- | ரூ.10,000/- |
| 17. | திரு.வி.க மார்கெட்டில் அமைந்துள்ள கடைகளுக்கு தினசரி வாடகை வசூலித்துக்கொள்ளும் உரிமம் (மொத்தம் 79 கடைகள்) | ரூ.2,00,000/- | ரூ.2,00,000/- |
| 18. | திரு.வி.க மார்கெட்டிற்கு கொண்டு வரப்படும் சரக்குகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.10,000/- | ரூ.10,000/- |

வரிசை எண்.1 முதல் 18 வரை உள்ள உரிம இனங்கள் 01.04.2024 முதல் 31.03.2027 வரை மூன்றாண்டிற்கு அனுபவித்துக் கொள்ள வேண்டும்.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வ.எண்.1 முதல் 18 வரையிலான இனங்களை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
3. மயிலாடுதுறை நகராட்சி பொது ஏல நிபந்தனைகள், சிறப்பு நிபந்தனைகள் கடந்த 2021–2024 முடிய மூன்றாண்டு நிபந்தனைகள் அனைத்தும் 2024–2027 வரையுள்ள ஆண்டிற்கும் பொருந்தும்.

**ந.க.எண்.6293/2023/அ2**

**<u>மன்றத் தீர்மானம் எண். 672 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**13)** இந்நகராட்சியில் 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரி மற்றும் வரியில்லா இனங்களில் தீவிர வரிவசூல் செய்யப்பட்டு வருகிறது. 2023-2024 ஆம் நிதியாண்டு முடிவடையவுள்ளதால் நிலுவையிலுள்ள வரி மற்றும் வரியில்லா இனங்களை வசூல் செய்திட இந்நகராட்சி 36 வார்டுகளிலும் ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய இதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. அனுமதி அளிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று அனுமதி உத்தரவினை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.437/2024/அ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 673 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

14) மயிலாடுதுறை புதிய மாவட்டத்திற்கான மாவட்ட மைய நூலகக் கட்டடம் கட்டுதல் தொடர்பாக மாவட்ட நூலக அலுவலர் (பொ) மாவட்ட நூலக அலுவலகம், நாகப்பட்டினம் அவர்கள் தனது கடித எண்.ந.க.எண்:217/அ/2021, நாள்:02.01.2024–ல் மாவட்ட மைய நூலகத்திற்கு நிலத்தினை மதிப்பீடு செய்து கிரையத்தொகை வழங்க அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதால் மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்:3, பிளாக் எண்:2, நகரளவை எண்:53/1–ல் 28847 சதுர அடி இடத்தினை நூலகத்துறைக்கு கிரையத்தொகையின்றி நிலமாற்றம் செய்து வழங்குமாறு கோரியுள்ளார்.

மயிலாடுதுறை நகரம் வார்டு எண்:3, பிளாக் எண்:2, நகரளவை எண்:53/1–ல் நகராட்சிக்கு சொந்தமான இடம் என்பதால் மேற்படி இடத்தினை மாவட்ட நூலகத்துறைக்கு நிலமாற்றம் செய்வதற்கு அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் அனுமதி பெற்ற பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்க இயலும் எனவே, வார்டு எண்:3, பிளாக் எண்:2, நகரளவை எண்:53/1–ல் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 28847 சதுரடியினை மாவட்ட நூலகத்துறைக்கு நில மாற்றம் செய்திட உரிய முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வழியாக அரசிற்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.**5398/2023/எப்1.

**<u>மன்றத் தீர்மானம் எண். 674 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

15) மயிலாடுதுறை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் கீழ்கண்ட பணியிகளை மேற்கொள்ள உள்ளுர் விலைப்புள்ளிகள் 07.11.2023 அன்று கோரப்பட்டதில் கீழ் கண்டவிபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி மதிப்பு . ரூ | விலைப்புள்ளி அளித்துள்ள மூன்று நிறுவனத்தின் பெயர்கள் | மதிப்பீட்டை விட குறைவு / மதிப்பீட்டை விட அதிகம். | குறைந்த விலைப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள நிறுவனத்தின் பெயர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணியில் ஆய்வுக்குழி வழியாக சாலைகளில் வழிந்தோடும் கழிவு நீரினை அப்புறப்படுத்தும் பணிக்கு தனியார் கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் இரண்டு எண்ணிக்கையில் மூன்று மாத காலத்திற்கு வாடகை அடிப்படையில் அமர்த்திக் கொள்ளும் பணி. | ரூ.7,50,000/– | வெற்றி விநாயகா செப்டிக் டேங்கர், மயிலாடுதுறை. | ரூ.4400.00 (- ) 0.0026% குறைவு | வெற்றி விநாயகா செப்டிக் டேங்கர், மயிலாடுதுறை. |
| | | | ரித்திகா செப்டிக் டேங்கர், மயிலாடுதுறை. | ரூ.4450.00 (+) 0.0085% அதிகம். | |
| | | | வேலன் செப்டிக் டேங்கர், மயிலாடுதுறை. | ரூ.4500.00 (+) 0.0196% அதிகம். | |

<u>அலுவலக குறிப்பு</u> : 1) பட்டியலில் கண்டுள்ள காலம் எண் : 6 இல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தன் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்,

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்** : 05467/2023/இ1,

<u>மன்றத் தீர்மானம் எண். 675, நாள்: 20.02.2023</u>

அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.

**16)** நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மயிலாடுதுறை, அவர்களின் கடிதம் ந.க.எண் ந.க.எண்.863 /2022/TCP நாள்.28.11.2022–ன்படி வார்டு எண்–3, பிளாக் எண்– 11 சர்வே எண்கள்– 442,443,444,445,446&447 மற்றும் வார்டு எண்:2,பிளாக் எண்:11 சர்வே எண்கள் 50/3–இல் 5574 சதுரமீட்டர் இடத்தில் சதுரமீட்டரில் அமையும் மனைப்பிரிவில் உள்ள சாலை, பொது உபயோக இடத்தினை தானபத்திரம் மூலம் (ஆவண எண். 2719/2022 நாள்:18.11.2022) மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு திரு.R.சட்டைநாதன் மற்றும் ப.செந்தமிழ்சேரன், என்பவரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி சாலை 1305.18 சதுர மீட்டர், மற்றும் பொது உபயேகம் 30.00 சதுர மீட்டர், இடத்தினை நகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொடுக்க மயிலாடுதுறை நிலவரித்திட்டம் நத்தம் தனிவட்டாட்சியருக்கு அனுப்பலாம் மேலும் மேற்படி தானபத்திரம் ஆவணம், மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்,

**ந.க.எண்.5664 / 2022/எப்1.**
**<u>மன்றத் தீர்மானம் எண். 676 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: பார்வையிட்டு பதிவுசெய்யப்படுகிறது.**

**17).** மாவட்ட ஆட்சியரின் 19.02.2024–ந்தேதிய ஆய்வுக்கூட்டத்தில் **கிளீன் மயிலாடுதுறை** என்னும் கருப்பொருளை மையமாகக்கொண்டு, வருகின்ற 24.02.2024 சனிக்கிழமை அன்று காலை 7.00 மணிமுதல் மதியம் 3.00 மணிவரை நகர்பகுதியில் உள்ள அனைத்து 36 வார்டு பகுதிகளிலும், பழங்காவேரி வாய்க்கால் பகுதிகளிலும், தேங்கியுள்ள குப்பைகள் (Legacy waste) மற்றும் இலைதழை மரக்கிளை குப்பைகள் உள்ளிட்ட அனைத்து வகையான குப்பைகளும் ஒட்டுமொத்த துப்புரவுப்பணிகள் (Mass Cleaning campaign) மூலம் அகற்றப்பட உள்ளது. இந்நிகழ்வில் அருகில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பணியாளர்கள், வாகனங்கள் மற்றும் வர்த்தக சங்கம், ரோட்டரி சங்கம் ஆப் டெல்டா, வனம் தன்னார்வலர்கள் அமைப்பை சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்று அன்று ஒரே நாளில் 36 வார்டு பகுதிகளிலும் தேங்கியுள்ள குப்பைகள் அகற்றும் மாபெரும் தூய்மைப்பணி நடைபெற இருப்பதால், அனைத்து 36 வார்டு நகர்மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் பொருட்டும், தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும் செலவு, JCB மற்றும் டிராக்டர் வாகன செலவு, IEC விளம்பர செலவிற்கும், தொடர்ந்து இப்பணியினை மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.2.75–ஐ (இரண்டு லட்சத்து எழுபத்தைந்தாயிரம்) நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண். 5545/2023/எச்1</u>**

**<u>மன்றத் தீர்மானம் எண். 677 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்படுகிறது.**

**18)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை மேற்கொள்ள இரண்டு தனியார் JCB இயந்திரம் வாடகைக்கு அமர்த்தி கொள்வதற்கு 26.08.2023 அன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றதின் விவரம் பின்வருமாறு,

| வ. எண் | விலைப்புள்ளி அளித்துள்ளவர்களின் பெயர் | பணி | நேரம் | வாடகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | K.G.S. Earth Movers No.55.E.V.R Street, Koranad, Mayiladuthurai | JCP வண்டியை பயன்படுத்தி மழைநீர் வடிகால் தூர்வாரும் பணி | 1 மணி நேரத்திற்கு | **1450/-** |
| 2 | S.V.S, Earth Movers No. 34. Hajiyar Nagar, Koranadu, Mayiladuthurai | | | **1500/-** |

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற K.G.S. Earth Movers No.55.E.V.R Street, Koranad, Mayiladuthurai என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் JCB இயந்திரம் வாடகைக்கு அமர்த்தி கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்றதை தொடர்ந்து 26.08.2023 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள K.G.S. Earth Movers No.55.E.V.R Street, Koranad, Mayiladuthurai மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4793/2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 678 நாள்: 20.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்படுகிறது.**

**19)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 36 வார்டுகளில் அமைந்துள்ள 12 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 18 பொது கழிப்பிடங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கவும், தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ODF (Certification and Q3 assessment) தரசான்று பெற ஏதுவாக தயார் நிலையில் வைக்கவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின், கடித ந.க.எண். 24196/2002–SWZ. நாள்.23.12.2022–ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி கழிப்பிடங்களை சுத்தமாவும், சுகாதாரமாகவும், பராமரிக்கவும், 14 நகராட்சி பள்ளிகள் மற்றும் 4 அரசு பள்ளிகளில் அமைந்துள்ள கழிப்பிடங்களை, சுகாதாரமாக பராமரிக்கவும், பேருந்து நிலையம் சிறுநீர் கழிக்கும் இடங்களில் சுகாதாரமுறையில் பராமரிக்கவும், நகராட்சி கட்டிடங்களில் அமைந்துள்ள ஆண், பெண், கழிப்பறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பறைகளை சுகாதாரமாகவும் சுத்தமாகவும் பராமரிக்கவும், கறை நீக்கும் திரவம் தனியார் நிறுவனம் மூலம் வாங்குவதற்கு 04.01.2024–அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண். | விலைப்புள்ளி அளித்துள்ளவர்களின் பெயர் | அளவு | விலை விபரம் |
|---|---|---|---|
| 1 | **Aathi Enterprises Sunnambukara street, Trichy -620008** | **Special toilet floor stain remover 1 Lit** | **Rs. 330+18%GST** |
| | | **Block Phenyl 1 Lit** | **Rs. 90+18%GST** |
| 2 | **Supersurf Home care Productz Pvt.Ltd** | **Special toilet floor stain remover 1 Lit** | **Rs. 380+18%GST** |
| | | **Block Phenyl 1 Lit** | **Rs. 105+18%GST** |
| 2 | **RSA TRADERS** | **Special toilet floor stain remover 1 Lit** | **Rs. 390+18%GST** |
| | | **Block Phenyl 1 Lit** | **Rs. 110+18%GST** |

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற **Aathi Enterprises Trichy** நிறுவனத்திற்கு கொள்முதல் செய்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 6001/2023/எச்1**
**மன்றத் தீர்மானம் எண். 679 நாள்: 20.02.2023**
**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்படுகிறது.**

**20)** இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் பணியில் உபநீர் உந்து நிலையம் VIII –A- ன் கழிவு நீர் வெளியேற்றம் புது அக்ரஹாரம் தெரு வழியாக தரங்கம்பாடி சாலையில் உள்ள பிரதான கழிவு நீரேற்று நிலையம் VIII –ன் சேகரிப்பு கிணற்றுக்கு சென்றடையும் பணியில், வடிவமைப்பின் படி 313 மீட்டருக்கு மட்டுமே நீரேற்று குழாய் மூலம் கழிவு நீரேற்றம் நடைபெற்று, ஆய்வுக்குழாயின் வழியாக 640 மீட்டர் தூரம் வடிநிலை தன்மையுடன் வெளியேற்றப்படுகின்றன.

இந்த பணியில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிய நிலையில் திடக்கழிவுகளால் பல ஆய்வுக் குழிகளில் அடைப்புகள் ஏற்பட்ட நிலையால் கழிவு நீரேற்று நிலையம் VIII-A-யிலிருந்து நீரேற்றம் நடைபெறும் போது Receiving Chamber முதல் புது அக்ரஹாரம் மற்றும் அண்ணா நகர் பகுதிகளில் உள்ள மிகுதியான அய்வுக்குழிகளில் தரைமட்டத்திற்கு மேல் கழிவு நீர் கசிவு ஏற்படுவதால், குடியிருப்பு பகுதிகளில் உள்ள கழிவு நீர் தொட்டிகளில் உட்புகுந்து சுகாதார நலன் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டு வருகின்றன.

இக்குறைப்பாட்டை தவிர்க்க உப கழிவு நீரேற்று நிலையம் VIII-A-லிருந்து கழிவுநீர் மோட்டார் பம்ப் மூலம் நீரேற்றும் நடைபெற உள்ள Pumping main-ன் Receiving மையத்திலிருந்து LB நகர் மற்றும் தரங்கம்பாடி சாலை வழியாக 350 மீட்டர் தூரம் 200mm PUC குழாய் அமைத்து பிரதான கழிவு நீரேற்று நிலையம் VIII-க்கு சென்றடையும் வகையில் பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்கான மதிப்பீடு செலவிணம் ரூ.8,25,000/- க்கும் செலவிணத்திற்கு அனுமதியும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **இப்பணிக்கான செவிணத்திற்கு** 2023 – 2024 **நிதியாண்டு பொது நிதி வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காக.**
3. பணியின் அவசிய அவசரம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். /2024/இ1**
**மன்றத் தீர்மானம் எண். 680 நாள்: 20.02.2023**
**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்படுகிறது.**

**நாள்: 16.02.2024**

**நகர்மன்றத்தலைவர்,**
**மயிலாடுதுறை நகராட்சி.**